05.02.2026.

OS.180/2021

PW1- ஹாஜா முகைதீன் – S/o. முகம்மது தீதார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. எனக்கும் பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 17.06.2016 ம் தேதி ஆகும்.

2. எனக்கு எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் செங்கோட்டையில் A.S.M திருமண மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது.

3. திருமணத்தின் போது என் மனைவிக்கு 70 கழஞ்சு நகை போட்டார்கள் என்றால் சரியல்ல நான் தான் நகை போட்டு திருமணம் செய்து கொண்டேன்.

4. திருமணத்திற்கு முன்பு எங்கள் பள்ளிவாசலில் 16.04.2016 ல் எனக்கும் பிரதிவாதிக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான்.

5. மேற்படி நிச்சயமானது ஜீமா பள்ளிவாசலில் எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த நிச்சய ஒப்பந்தத்தில் பிரதிவாதிக்கு 70 கழஞ்சி நகை போடுவதாக இரு வீட்டாரும் பேசி ஒப்புக்கொண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது நான் அப்போது வெளிநாட்டில் இருந்தேன்.

6. பிரதிவாதிக்கு போட்ட 70 கழஞ்சி நகை என் கைவசம் உள்ளது என்றால் இல்லை. நான் தான் பிரதிவாதிக்கு 400 கிராம் நகை போட்டேன்.

7. நான் இந்த விவரத்தை தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் தாக்கல் செய்த பிராதிலேயே பிரதிவாதிக்கு 200 கிராம் நகை போட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அந்த 200 கிராம் ஆனது மகர் ஆகும். என் மகனுக்கு 200 கிராம் நகை போட்டேன்.

8. என் மகனுக்கு 200 கிராம் நகை போட்டதாக பிராதிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றும் பிராதில் 58 கிராம் மட்டுமே என் மகனுக்கு போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தனிப்பட்ட முறையில் நான் போட்டுள்ளேன். அவ்வாறு தனிப்பட்ட முறையில் நான் போட்டதாக நான் பிராதில் கூறாததால் இந்த விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல.

9. நான் 200 கிராம் நகை போட்டதற்கோ, 58 கிராம் நகை போட்டதற்கோ எத்ந ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் வெளிநாட்டில் இருக்கும் போது என் மனைவியின் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி அவர் பணத்தை எடுத்து கடையநல்லூர் நகை கடையில் நகை வாங்கினார். இந்த விவரங்கள் தவறானவை என்றும் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தில் 34 கிராம் மட்டுமே நகை வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

10. திருமணம் முடிந்த 3 மாதத்தில் நான் வெளிநாடு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அப்போது என் மனைவி கர்ப்பமாக

இருந்தார் என்றால் சரிதான். ஆனால் நான் வெளிநாடு செல்வதற்கு முன்பே என் மனைவி அவரின் தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

11. நான் தான் வெளிநாடு செல்ல இருப்பதாலும் பிரதிவாதி கர்ப்பமாக இருப்பதாலும் அவரின் தாய் வீட்டிற்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல தனிக்குடித்தனம் வேண்டும் என்று பிரச்சனை செய்து சென்றுவிட்டார். இந்த விவரத்தை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த விவரங்கள் தவறாக வழக்கிற்காக கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

12. எப்போது வெளிநாட்டில் மீண்டும் தாயகம் திரும்பினேன் என்றால் என் மகன் பிறந்த பின் மே மாதம் வந்தேன். நான் மே மாதம் வந்து என் மகனை பார்க்கவில்லை என்றால் சரியல்ல 20 நாட்கள் கழித்து சென்று பார்த்தேன். இந்த விவரத்தை பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

13. பிரதிவாதிக்கு குழந்தை பிறந்த பின் நானோ, என் குடும்பத்தாரோ குழந்தையை சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

14. முஸ்லீம் வழக்கப்படி குழந்தை பிறந்தபின் குழந்தையையும், தாயையும் கணவர் வீட்டில் இருந்து அழைத்து வருவது தான் நடைமுறை வழக்கம் என்றால் சரிதான். அந்த நடைமுறை வழக்கப்படி நான் பிரதிவாதியை அழைத்தேனா என்றால் அழைத்தேன் தனிக்குடித்தனம் என்றால் வருவேன் இல்லை என்றால் வரமாட்டேன் என்று கூறிவிட்டார்.

15. எந்த தேதியில் அழைத்தேன் என்பது குறித்து நான் என் பிராதிலும், விசாரணை வாக்குமூலத்திலும் கூறாததால் இந்த சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. இந்த விவரத்தை இந்த வழக்கை தவிர வேறு வழக்கில் கூறவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளேன்.

16. நான் வெளிநாட்டில் இருந்து வந்த பின் என் மனைவியை என் வீட்டிற்கு அழைக்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

17. 2019ம் வருடம் ரம்ஜான் முடிந்து 3ம் நாள் பிரதிவாதி அப்பா என் வீட்டில் பிரதிவாதியை விட்டு சுமார் 1.1/2 மாதம் பிரதிவாதி என் வீட்டில் வசித்து வந்தார் என்றால் இல்லை. அந்த நேரத்தில் நாங்கள் பிரதிவாதியை கொடுமை செய்ததால் பிரதிவாதி எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் வரதட்சணை புகார் மற்றும் பணம் தரவில்லை என்ற புகார் மட்டுமே உள்ளது.

18. நான் வெளிநாட்டில் இருந்து வந்த பின் என் மனைவியை அழைக்காததால் பிரதிவாதியின் தந்தை 2019ம் வருடம் ரமலான் பண்டிகை முடிந்த 3ம் நாள் என் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார் என்றால் சரியல்ல பிரதிவாதி தரப்பில் இருந்து 6 நபர்கள் வந்து தனிக்குடித்தனம் வைக்க சொல்லி பேசினார்கள்.

19. பிரதிவாதி என்னுடன் வாழவேண்டும் எனக்கூறி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

20. பிரதிவாதி என் மீது 16.08.2019ம் தேதி புகார் கொடுத்ததால் போலீசார் என்னை 19.08.2019ம் தேதி விசாரித்தார்கள் என்றால் சரிதான். விசாரணையின் போது நான் தனிக்குடித்தம் போக சம்மதித்து 10 நாட்களில் வீடு பார்ப்பதாக நான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தேன் என்றால் நாள் முழுக்க காவல் நிலையத்தில் வைத்ததால் தினசரி காவல் நிலையத்திற்கு அழைத்ததால் எழுதிக் கொடுத்தேன். இந்த விவரங்கள் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

21. என் பிராதில் காவல் நிலையத்தில் குறிப்பிட்டவாறு 10 நாளில் வீடு பார்த்து தனிக்குடித்தனம் செல்ல அழைத்தும் பிரதிவாதி வரவில்லை என நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

22. நான் ஏற்கனவே எழுதிக் கொடுத்தவாறு வீடு பார்க்காததால் பிரதிவாதி என் மீது 07.09.2019ம் தேதி மீண்டும் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் என் நகையை கொடுத்தால் அதை வைத்து வீடு பார்க்க முன் பணம் கொடுக்க கேட்டேன் ஆனால் நகை தர மறுத்துவிட்டார். இந்த விவரங்களை நான் பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

23. நான் ஏற்கனவே பிரதிவாதியின் மீது அ.வ.308/2019 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது பிரதிவாதியை என்னுடன் சேர்ந்து வாழச் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

24. அ.வ.308/2019 வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்

வழக்குரையில் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 01.02.2020 முதல் 06.09.2021 வரை என் ஆஜர்க்காக வழக்கு போடப்பட்டும் நான் தான் வரவில்லை என்றால் சரிதான் அப்போது நான் வெளிநாட்டில் இருந்தேன் அது கொரோனா காலகட்டம் ஆகும். நான் வராததால் தான் அ.வ.308/2019 வழக்கு தள்ளுபடியாகியது என்றால் சரிதான்.

25. 2021ம் வருடம் ஏப்ரல் மாதம் வெளிநாட்டில் இருந்து நான் தாயகம் திரும்பினேன் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் இருந்து திரும்பிய பின் பிரதிவாதி அ.வ.308/2019 வழக்கை முன்கொணர்வு செய்ய வேண்டி இடை மனு எண்.3/2021 மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

26. பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றும் நான் தான் அவருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றும் எனவே என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

27. உண்மையிலேயே எனக்கு பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருந்திருந்தால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்யாமல் அ.வ.308/2019 வழக்கை தொடர்ந்து நடத்தியிருப்பேன் என்றால் சரியல்ல.

28. என் குழந்தையின் பெயர் முகம்மது சாத். குழந்தை பிறந்த பின் குழந்தையின் சிறுநீர் குழாயின் அடைப்பு ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அது அடைப்பு அல்ல குழந்தைக்கு

செய்யப்பட்ட சுன்னத் விழா ஆகும். நான் தவறாகக் கூறுகின்றேன் என்றும் குழந்தைக்கு சுன்னத் விழாவே நடைபெறவில்லை என்றும் அது அறுவை சிகிச்சை தான் என்றும் சொன்னால் சரியல்ல.

29. பிரதிவாதி என் மீது 2023ம் வருடம் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் DVC.No.17/2023 மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். DVC.No.17/2023 மனுவில் எனக்கு எதிராக உத்தரவு பகரப்பட்டது என்றால் சரிதான். அது நான் இல்லாத போது ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

30. DVC.No.17/2023 மனுவில் என் பெற்றோரும் தரப்பினர் என்றால் சரிதான். என் பெற்றோர் வழக்கறிஞரை வைத்து ஆஜரானார்கள் என்றால் சரிதான்.

31. என் மீது மனு தாக்கல் செய்திருப்பது தெரிந்தும் வேண்டுமென்றே நான் ஆஜராகததால் தான் எனக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

32. குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்றும் போது எனக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு வெளிநாட்டில் இருந்ததால் என்னை தாயகம் திரும்புவதற்காக நீதிமன்றத்தால் Look Out Notice பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

33. DVC.No.17/2023 மனுவில் பிரதிவாதியும் குழந்தையும் என் வீட்டில் தங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

34. DVC.No.17/2023 மனுவின் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற சமூக நலத்துறை அதிகாரி உதவியுடன் பிரதிவாதி என் வீட்டிற்கு வரும் போது என் அப்பா, அம்மா மற்றும் சலீம் என்பவர் தடுத்ததால் அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் மாலை 6 மணிக்கு மேல் வந்தார்கள் என் அப்பாவிற்கு கண்பார்வை தெரியாது.

35. இந்த வழக்கு நான் வராததால் ஒரு முறை தள்ளுபடி ஆகியது என்றால் சரிதான்.

36. சமூக நலத்துறை அதிகாரி உதவியுடன் பிரதிவாதி என் வீட்டிற்கு வந்த காரணத்தினாலயே நான் இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க மனு செய்தேன் என்றால் சரிதான்.

37. பிரதிவாதி தகப்பனார் என்னிடம் 7 லட்சம் பணம் வாங்கியதாக நான் இந்த வழக்கில் கூறிய விவரத்தை அ.வ.308/2019 வழக்கில் குறிப்பிடவில்லை எறன்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் என்னிடம் எந்த தொகையும் வாங்காததால் தான் நான் அ.வ.308/2019 வழக்கில் இதை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

38. பிரதிவாதி 2019 க்கு பின் என்னை அலைபேசி மூலம் மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த எண்ணில் இருந்து போன் செய்தார் என்று குறிப்பிடாததால் இந்த சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல.

39. பிரதிவாதிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றும் பிரதிவாதியின் 70 கழஞ்சி நகை என் வசம் தான் உள்ளது என்றும் இந்நீதிமன்றத்தால் முகமதியருக்கு சட்டப்படி விவாகரத்து வழங்க சட்ட அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

40. என் பெற்றோர் தவறான துர்போதனையின் பேரில் நான் பிரதிவாதியினை தன்னிச்சையாக விட்டுவிட்டு வாழாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

41. என் மகனை பார்க்க நான் என்ன சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் நான் தினசரி என் மகனை பள்ளியில் பார்ப்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் நான் என் மகனை பள்ளியில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

42. பிரதிவாதிக்கோ அவரது தகப்பனாருக்கோ நான் 4 லட்சம் பணம் கொடுக்கவில்லை என்றும் தவறான விவரங்களை நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி